செ.வெ.எண் 172/2017 நாள்:08.03.2017

விவசாயிக

## ~~பொது மக்க~~ளுக்கு அறிவிப்பு

1959-ம் வருடத்திய தமிழ்நாடு சிறுகனிம சலுகை விதிகளில் விதி எண் 12(2)-ன் படி பொதுப்பணித்துறை மற்றும் ஊரக வளர்ச்சித்துறை பராமரிப்பில் உள்ள கண்மாய் / குளம் / ஏரிகளில் வண்டல் மண் ஆகியவற்றை விவசாய நோக்கத்திற்காக எடுத்துச் செல்ல அரசாணை எண் 233(எம்.எம்.சி.2) தொழிற்துறை, நாள்:23.09.2015 வெளியிடப்பட்டுள்ளது. இது தொடர்பாக கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள 1051 (தோவாளை வட்டம் -195, அகஸ்தீஸ்வரம் வட்டம் -149, கல்குளம் வட்டம் - 280, விளவங்கோடு வட்டம் - 427) குளங்கள் / கண்மாய்களின் விபரம் கன்னியாகுமரி மாவட்ட அரசிதழ் சிறப்பு வெளியீடு எண்: 1, நாள்: 06.03.2017-ல் வெளியிடப்பட்டுள்ளது. விவசாயிகள், தங்களின் விளைநிலங்களை மேம்படுத்துவதற்காக 30 கனமீட்டர் அளவிற்கு எந்தவித கட்டணமும் செலுத்தாமல் வண்டல் மண் எடுத்துக்கொள்ளலாம்.

குளம் அமைந்துள்ள கிராமம் மற்றும் குளம் அமைந்துள்ள கிராமத்திற்கு அருகில் உள்ள கிராமங்களில் வசிக்கும் விவசாயிகள், கிராம நிர்வாக அலுவலரிடமிருந்து பட்டா மற்றும் கிராம கணக்குகள் பெற வேண்டும். சம்பந்தப்பட்ட ஆவணங்களுடன் உரிய வட்டாட்சியரிடம் விண்ணப்பித்து அதன்பின் அனுமதி பெற்ற விவசாயிகள், பொதுப்பணித்துறை குளத்திலிருந்து வண்டல் மண் எடுக்க சம்பந்தப்பட்ட உதவிப்பொறியாளர் / இளநிலை பொறியாளரிடமும், ஊரக வளர்ச்சித்துறை கட்டுப்பாட்டில் உள்ள குளத்தில் இருந்து மண் எடுக்க சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய, உதவிப்பொறியாளர்கள் மேற்பார்வையில் தகுதியுள்ள விவசாயிகள் 30 கன மீட்டர் அளவிற்கு மட்டும் வண்டல் மண் எடுத்துக்கொள்ளலாம்.

விவசாயிகள் / ~~பொதுமக்கள்~~ இந்த அறிவிப்பின் மூலம் பயன்பெற்றுக் கொள்ளுமாறு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

8.3.17

மாவட்ட ஆட்சித்தலைவர்
கன்னியாகுமரி மாவட்டம்.

நகல்:
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
நாகர்கோவில்

8/3/17

8/3/2017